பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
10 07 2026 FRIDAY 6 30 PM
வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தமிழகத்தின் பழங்கால கலைப் பொருட்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து மீட்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் சுகாதார இயக்கத்தின் கீழ் 94 கோடிக்கும் மேற்பட்ட மருத்துவ கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு பணிக்கான ஆணைகளை முதலமைச்சர் திரு. விஜய் இன்று வழங்கினார்.

- தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், திருச்சி கிழக்கு உட்பட ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

- 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

தமிழகத்தின் பழங்கால கலைப் பொருட்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து மீட்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 11 மற்றும் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழகத்தின் வரலாற்றுச் சிற்பங்கள் மற்றும் கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை 600-க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவது பாராட்டுதலுக்குரியது என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனும், தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கலைபொருட்கள் மீட்கப்பட்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தமிழை அரசியல் ஆதாயத்திற்காக சிலர் பயன்படுத்தி வரும் வேளையில், தமிழ் மொழியையும் கலாச்சார பெருமைகளையும் கொண்டாடும் பிரதமராக, திரு. நரேந்திர மோடி திகழ்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

உலகின் மிகப் பெரிய டிஜிட்டல் சுகாதார இயக்கமாக ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் திகழ்கிறது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த இயக்கத்தின் வழிகாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்த இயக்கத்தின் கீழ் 94 கோடிக்கும் மேற்பட்ட மருத்துவ கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில், 105 கோடி மருத்துவ ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இயக்கத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மருத்துவமனைகளும், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்களும் பதிவு செய்துள்ளதாக திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

>>>>>><<<<<

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு பணிக்கான ஆணைகளை முதலமைச்சர் திரு. விஜய் இன்று வழங்கினார்.

கரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 31 பேருக்கு அவர் நியமன ஆணைகளை வழங்கியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பள்ளிக்கல்வி, வருவாய், சமூகநீதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

முதலமைச்சர் திரு. விஜய், கரூரில் பேசிய நிகழ்ச்சி அரசு பள்ளிகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதாகவும், இது கண்டிக்கத்தக்கது என்று திமுக கூறியுள்ளது.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள பதிவில், பள்ளி வளாகங்களில் அரசியலுக்கு இடமில்லை என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியதை சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது முறையல்ல என்றும், வகுப்பறைகளை சுயவிளம்பர களங்களாக மாற்ற த.வெ.க அரசு முயற்சித்தால், மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் திமுக தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், இதனை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு எடுக்க வேண்டும் என்றும் அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் இளைஞரணி நிர்வாகிகள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகம் முழுவதும் தகுதியான நபர்கள், அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்படுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்று மற்றொரு தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள முதல்வர் பணியிடங்களை விரைவாக பூர்த்தி செய்ய, த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 125 கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்லூரிகளின் வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இத்தகைய சூழல் தொடர அனுமதிக்கக்கூடாது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ், த.வெ.க. அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை மற்றும் அம்பாசமுத்திரம் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. S.A. Dharmadhikari, திரு. அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

இம்மனு தொடர்பாக தேர்தல் ஆணையமும், முதலமைச்சர் திரு. விஜய்-ம் வரும் 30ஆம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அதுவரை இந்த தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடக்கூடாது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சிங்கப்பெண் அதிரடிப் படை, மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த 3ஆம் தேதி தொடங்கி, நேற்று வரை 307 புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 25 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte -வி ஆர் துரை - 53 Sec.)

இதற்கிடையே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் இன்று மாலை கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 20 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவிலில் மத்திய அரசின் மக்கள் தொடர்பகத்தின் சார்பில் ஒருங்கிணைந்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. மோகனச்சந்திரன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

கடலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் குறித்த பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

*மதுரையில் அரசு ராஜாஜி மருத்துவமனையில் மண்டல புற்றுநோய் மையம் கட்டுவதற்கான இடம் தேர்வு குறித்து, ஆட்சியர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா இன்று ஆய்வு மேற்கொண்டார்.*

*>>>>>><<<<<*

*நாகை மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், குறுவை பருவத்திற்கு விவசாயிகள் பதிவு செய்ய வரும் 31ஆம் தேதி கடைசி நாளாகும் என்று ஆட்சியர் திரு. பிரவின்குமார் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*சீனாவின் Ordos-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 800 மீட்டர் ஓட்டப் பிரிவில் Shakeel-ம், மகளிர் 800 மீட்டர் ஓட்டப் பிரிவில் Bhurmeshwory Devi Huidrom-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

*>>>>>><<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 6 பதக்கங்களை உறுதி செய்துள்ளது.*

*இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் Chandrika Pujari, Joyshree Devi, Prachi, Chahat, Anshika, Gunjan ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.*

*>>>>>><<<<<*

*ஆசிய விளையாட்டு போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய மகளிர் ஹாக்கி அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*Salima Tete தலைமையிலான இந்த அணியில் 19 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*>>>>>><<<<<*

*இந்தியா - இங்கிலாந்து இடையேயான வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று Lords-ல் தொடங்கியது.*

*இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீச தீர்மானித்தது.*

*இதனையடுத்து பேட் செய்து வரும் இந்தியா முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 3 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்துள்ளது.*

*>>>>>END<<<<<*